/ தொலைபேசி இல. / Telephone Nos.:

...mister / ...அமைச்சர்: 2784832, Fax: 2784825

...retary / ...செயலாளர்: 2784812

...ice / ...அலுவலகம்: 2785141– 50, Fax: 2784846

/ ஈ-மெயில்/E - mail: isurupaya@moe.gov.lk

இல. / ...r No. ............................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No.: ...01/12/08/12/வருமான எல்லை

දිනය / திகதி / Date: 2009/01/20

**சுற்றறிக்கை இல : 2009/06**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல தேசிய பாடசாலை அதிபர்கள்

**5ஆம் தரத்தின் புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்குவதற்கு கருத்திற்கொள்ளப்படும் பெற்றோர் /சட்ட ரீதியான பாதுகாவலர்களின் <u>வருடாந்த வருமான மட்டத்தை மறுசீரமைத்தல்</u>**

தற்பொழுது புலமைப்பரிசில் கொடுப்பனவிற்காக கருத்திற்கொள்ளப்படும் பெற்றோரின் வருடாந்த வருமானம் ரூ.24000/- ஆகும். இருப்பினும் இவ்வருமான எல்லை தற்போது பொருத்தமற்றது என்பதனால் அதனை அதிகரிக்குமாறு மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்களினால் கோரிக்கைகள் இவ்வமைச்சிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு 5ஆம் தரத்தின் புலமைப்பரிசில் உரிமையை வழங்கும்போது கருத்திற்கொள்ளப்படும் பெற்றோரின் குடும்ப வருமான எல்லையை அதிகரிக்க அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமையினால் அது தொடர்பாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. எனவே வருடாந்த வருமான எல்லையை மறுசீரமைத்து இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை இல. **HRD/EQD/2002/20** மற்றும் 2002.08.15ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அப்பால் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான எல்லை 2009 ஜனவரி மாதம் தொடக்கம் அமுலிலிருக்கும்.

03. இதனடிப்படையில் புதிய வருமான மறுசீரமைப்பின் கீழ் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை பெறும்போது கருத்திற்கொள்ளப்படும் பெற்றோரின் /பாதுகாவலர்களுக்கு சகல முறைகளிலும் கிடைக்கும் வருடாந்த வருமானம் 2009.01.01ஆம் திகதி தொடக்கம் ஆண்டொன்றிற்கு ரூபா.24000/- இலிருந்து ரூ.54000/- ஆக (மாதத்திற்கு ரூ.4500/-) அதிகரிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் புலமைப்பரிசிலுக்கு உரிமை பெறுவதற்காக இருக்க வேண்டிய வருடாந்த வருமான எல்லை ரூபா 54000/- அல்லது அதனைவிடக் குறைந்த மட்டத்தில் இருக்கவேண்டும். இது எவ்வாறாக இருப்பினும் சமுர்த்தி உதவி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதனால் கிடைக்கும் உதவிகள் இவ்வருமான எல்லையில் உள்ளடக்கப்படமாட்டாது.

04. இதனடிப்படையில் மேற்கூறப்பட்ட மறுசீரமைப்புகள் 2009ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சை தொடக்கம் தொடர்ந்தும் அமுலிலிருக்கும்.

(i) புலமைப்பரிசிலுக்கான உரிமை கிடைக்கும் புதிய வருமான எல்லை 2009ஆம் ஆண்டு தொடக்கம் 5ஆம் தரத்தின் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு அமுலிலிருக்கும்.

(ii) இது எவ்வாறாக இருப்பினும் இவ்வருமான மறுசீரமைப்பின் கீழ் ஏற்கனவே புலமைப்பரிசில் கொடுப்பனவுகளைப் பெற்று புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ளும் புலமைப்பரிசில்தாரர்களின் குடும்பத்தின் வருமான எல்லை ரூ.24000/- தொடக்கம் ரூ.54000/- வரை அதிகரிக்கப்படுகின்றது.

(iii) இது எவ்வாறாக இருப்பினும் இவ்வருமான மறுசீரமைப்பின் மூலம் தற்பொழுது புலமைப்பரிசில் கிடைக்காத புலமைப்பரிசில்தாரர்களுக்கு புதிதாக . புலமைப்பரிசில் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியாது என்பதையும் வலியுறுத்துகிறேன்.

05. இக்கடிதத்தின் ஆலோசனைகளுக்கமைய 2009ஆம் ஆண்டு தொடக்கம் புலமைப்பரிசில் கொடுப்பனவின் போது செயற்படுமாறு தயவாய் அறியத்தருகிறேன்.

எம்.எம்.என்.டீ. பண்டார
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. பரீட்சை ஆணையாளர் நாயகம்
2. சகல மாவட்ட செயலாளர்கள்
3. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
4. கணக்காளர்கள்
5. சகல பிரதேச செயலாளர்கள்.